FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318709

1. District : மாவட்டம் Coimbatore | PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 01/2026/AC/CB | Date: நாள் 23.01.202

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 21.11.2025 | Date to : நாள் வரை 21.01.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.01.2026 | Time : நேரம் 16.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.01.2026 GD VOL-I | Time : நேரம் 16.00hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 10km South

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி O/o North Taluk office. Coimbatore District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Vijayakumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Subharao

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48/2026 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி Door.No.415 Navallar Neduchelian Nagar 4, Veerapandi Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Hariharan. Record clerk, North Taluk office. Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NO Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble principal District Sessions' Judge Coimbatore

Separate Sheets attached herewith

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/1/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23/01/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA
Name: பெயர் Inspector of police

Rank: நிலை ..... No. எண்.....

Vigilance and Anti-Corruption
Coimbatore. 23/01/2026

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.01.2026
10.30hrs

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8318709-ன் தொடர்ச்சி.

22.01.2026-ம் தேதி வியாழக்கிழமை 16.00 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், 4-வீரபாண்டி, எண் 45, நாவலர் நெடுஞ்செழியன் நகரை சேர்ந்த சுப்பாராவ் என்பவரது மகன் திரு.விஜயகுமார் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு எழுத்தராக பணிபுரிந்து வரும் திரு.ஹரிஹரன் என்பவர் புகார்தாரரின் வாரிசு சான்றிதழை ஆவணப்பதிவறை அலுவலக கோப்பிலிருந்து எடுத்து வழங்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.7,000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 23.01.2026-ம் தேதி 09.30 கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.ஹரிஹரன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு:

அனுப்புனர் S.விஜயகுமார், வயது 48, த/பெ. R.சுப்பாராவ்(லேட்), எண் 45, நாவலர் நெடுஞ்செழியன் நகர், 4-வீரபாண்டி, கோயம்புத்தூர்-19. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது அம்மா நஞ்சம்மாள் அவர்களுடன் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா சுப்பாராவ் கடந்த 27.12.2015 அன்று காலமாகிவிட்டார். எனது பெற்றோருக்கு நானும் எனது அண்ணன் சுரேஷ் ஆகியோர் மட்டுமே வாரிசுகள் ஆவோம். எனக்கு திருமணமாகவில்லை. எனது அண்ணன் கதவு எண்.6/33, உழைப்பாளர் வீதி, உருமாண்டம்பாளையம், கோயம்புத்தூர் என்ற முகவரியில் உள்ள எங்களது பூர்வீக வீட்டில் அவரது குடும்பத்துடன் வசித்து வருகிறார். நான் கடந்த ஒரு வருடமாக கோவை, கோவில்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ரூ.15,000/- மாத சம்பளத்திற்கு வாட்ச் மேனாக பணிபுரிந்து வருகிறேன். எனது அண்ணன் குடியிருந்து வரும் எங்களது பூர்வீக வீட்டை விற்பதற்க்காக நாங்கள் அனைவரும் முடிவுசெய்து அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் என்னையே செய்ய சொன்னதின் பொருட்டு, நான் அருகில் இருந்த பத்திர எழுத்தர் அலுவலகம் சென்று விசாரித்தபோது மேற்படி பத்திர எழுத்தர் எங்களது வீட்டின் அசல் ஆவணங்களான வீட்டுப்பத்திரம், பட்டா, எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவைகள் எங்கள் வீட்டை விற்பதற்கு தேவைப்படுவதாக சொன்னார். அசல் வாரிசு சான்றிதழை தவிர மேற்சொன்ன அனைத்து ஆவணங்களும் எங்களிடம் இருந்தது. எனது தகப்பனார் இறந்தபிறகு 10.07.2016ஆம் தேதி அன்று வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 5-அசல் வாரிசு சான்றிதழ்களில் இரண்டை எனது தகப்பனாரின் பெயரில் சேமிப்பு கணக்கு உள்ள வங்கிகளுக்கும், ஒன்றினை PF Office-க்கும், மற்றொன்றை தபால் அலுவலகத்திற்கும் என மொத்தம் 4-அசல் வாரிசு சான்றிதழ்களை கொடுத்துவிட்டேன். மீதம் இருந்த ஒரேஒரு அசல் வாரிசு சான்றிதழை நான் தொலைத்துவிட்டேன். எனவே வாரிசு சான்றிதழ் பெறவேண்டி நான் கடந்த 29.10.2025 ஆம் தேதியன்று கோவை வடக்கு வட்டாட்சியர்

அலுவலகத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள ஆவணப்பதிவேடு பிரிவிற்கு சென்று, மேலும் 5-வாரிசு சான்றிதழ் நகல் வழங்க கோரி, மேற்படி 10.07.2016 ஆம் தேதியிட்ட வாரிசு சான்றின் நகலினை இணைத்து ஒரு மனுவினை கொடுத்தேன். அப்போது அந்த மனுவினை வாங்கிய அலுவலர் என்னிடம், பழைய அசல் ஆவணங்களை அந்த பிரிவில் தேடிபார்த்துவிட்டு கூப்பிடுவதாக சொல்லி என்னை அனுப்பிவைத்தார். பின்னர் கடந்த 03.11.2025 அன்று வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று அங்கிருந்த திரு.ஹரிஹரன் என்ற அலுவலரை சந்தித்து எனது மனு சம்பந்தமாக அவரிடம் கேட்டேன். அவரும் என்னிடம் அலுவலகத்தின் பதிவறையில் உள்ள ஆவணங்களை தேடிபார்த்துவிட்டு கூப்பிடுவதாக சொன்னார். அதன் பின்னர் நான் மீண்டும் 21.11.2025 தேதி அன்று வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று மேற்படி திரு.ஹரிஹரன் அவர்களை சந்தித்து எனது மனு சம்பந்தமாக அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் எனது வாரிசு சான்றிதழ் சம்பந்தப்பட்ட பழைய பைலை தேடி எடுத்து அதை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கொடுத்து சான்றிதழ் பெற ஏற்பாடு செய்வதாகவும், அதற்கு ரூ.6000/-ஐ தனக்கு லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்றும் பைலை தேடி எடுத்தவுடன் என்னை கூப்பிடுவதாகவும் தெரிவித்தார். அதற்கு நான் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 25.11.2025 அன்று மேற்படி திரு.ஹரிஹரன் அவர்கள் 9042693837 என்ற செல் நம்பரிலிருந்து எனது செல் நம்பரான 6385614422-க்கு அழைத்து, அவர் அலுவலக கோப்புகளை தேடிபார்த்ததாகவும் ஆனால் அசல் வாரிசு சான்றிதழ் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்து நேரில் வந்து தன்னை பார்க்கும்படி சொன்னார். எனது சொந்த வேலையின் காரணமாக என்னால் மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் செல்ல முடியவில்லை. பின்னர் 29.12.2025 ஆம் தேதி அன்று மாலை வட்டாட்சியர் அலுவலகம் சென்று திரு.ஹரிஹரன் அவர்களை சந்தித்து எனது வாரிசு சான்றிதழ் குறித்து அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் வாரிசு சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்ய பழைய பைலை தேடிப்பார்த்து எடுக்க வேண்டும் என்றும், உடனே எனக்கான பைல் உடனே கிடைத்துவிட்டால் ரூ.6,000/- கொடுக்கவேண்டும் என்றும், இல்லை என்றால் ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க

வேண்டும் என்றும் சொல்லி அடுத்த நாள் தன்னை போனில் அழைத்துவிட்டு வரும்படி சொன்னார். அதன்படி நானும் 30.12.2025 ஆம் தேதி அன்று திரு.ஹரிஹரன் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் வேறுவேலையாக இருப்பதாகவும், அதுமட்டும் இல்லாமல் தான் விடுப்பில் செல்ல இருப்பதாகவும், விடுப்பு முடித்துவிட்டு வந்து என்னை அழைப்பதாக தெரிவித்தார். அவ்வாறு அவர் என்னை தொடர்பு கொள்ளாததால் நான் 06.01.2026, 10.01.2026 மற்றும் 12.01.2026 ஆம் தேதிகளில் அவரை செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி வாரிசு சான்றிதழ் குறித்து கேட்டபோது அவர் எனது பைல் கிடைக்கவில்லை என்றும், கிடைத்தவுடன் அவரே என்னை அழைப்பதாக சொன்னார். அவர் அவ்வாறு அழைக்காததால், நான் 19.01.2026 ஆம் தேதி மாலை அவரை தொடர்பு கொண்டு பேசியபோது அவர் என்னிடம் எனது மனுவின் விபரங்களை வாட்ஸ்அப்பில் அனுப்ப சொன்னார், அதன்படி நானும் எனது மனு மற்றும் வாரிசு சான்று நகல் ஆகியவற்றை அனுப்பிவைத்து அதை அவரிடம் தெரிவித்தேன். சிறிது நேரத்தில் அவர் என்னை அழைத்து இன்றைக்கு மேடம் இல்லை நாளைக்கு ஆபீசுக்கு வந்திருங்க என்று சொன்னதின்பேரில் நான் அடுத்தநாள் 20.01.2026 ஆம் தேதி காலை வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று திரு.ஹரிஹரன் அவர்களை சந்தித்து எனது வாரிசு சான்றிதழை கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் வாரிசு சான்றிதழ் கிடைக்க தான் ஏற்பாடு செய்துவிட்டதாகவும், ரூ.10,000/- கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, எனது மாத சம்பளமே ரூ.10,000/- தான் என்றும், அதனால் அவர் கேட்ட தொகையை கம்மிபண்ண சொன்னேன் அதற்கு அவர் ரூ.7000/- கொடுக்கும்படி சொல்லி என்னை அன்றைய தினம் மதியம் 2 மணிக்கு வரும்படி சொன்னார். அதற்கு நான் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் அவர் அன்று மதியம் சுமார் 2.45 மணியளவில் என்னை செல்போனில் அழைத்து ஆபீஸ் வரலையா என்று கேட்டார். நான் வந்து கொண்டு இருப்பதாக சொன்னேன். பின்னர் அன்றைய தினம் மாலை சுமார் 4 மணியளவில் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று திரு.ஹரிஹரன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னை

அவரது பிரிவிலேயே காத்திருக்குமாறு சொல்லி, எனது பைலை எடுத்து கொண்டு அலுவலகத்தின் முதல் தளத்திற்கு சென்றார். பின்னர் சிறிது நேரம் கழித்து என்னுடைய செல்போனிற்கு அழைத்து அலுவலகத்தின் முதல் தளத்திற்கு என்னை வருமாறு சொன்னார். நானும் முதல் தளத்திலிருந்த அவர்களிடம் சென்றேன். அப்போது அங்கிருந்த மேடம் அவர்கள் என்னிடம் எனது தகப்பனார் பெயர், குடியிருக்கும் முகவரி மற்றும் ஆதார்கார்டை வாங்கி பார்த்துவிட்டு, எனது வாரிசு சான்றிதழில் கையொப்பம் செய்து அந்த பைலை திரு.ஹரிஹரன் அவர்களிடம் கொடுத்தார். உடனே திரு.ஹரிஹரன் அவர்கள் என்னை பதிவேடு பிரிவில் காத்திருக்கும்படி சொன்னதின்பேரில் நான் மீண்டும் தரைத்தளத்திற்கு வந்து திரு.ஹரிஹரன் அவர்களின் அறையில் காத்திருந்தேன். சிறிது நேரத்தில் அங்கு வந்த திரு.ஹரிஹரன் அவர்கள், அவர் வைத்திருந்த 5-வாரிசு சான்றிதழ்களில் ஒன்றின் பின்பக்கத்தில் "4 வாரிசு சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டேன்" என்று எழுதி கையொப்பம் செய்யுமாறு சொன்னதின்பேரில் நானும் அவ்வாறு எழுதி தேதியிடாமல் கையெழுத்து போட்டேன். பின்னர் அவர் பணம் ரூ.7,000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் பணம் கொண்டுவரவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை கொடுத்துவிட்டு வாரிசு சான்றிதழை பெற்றுக்கொள்ளும்படி சொன்னார். நானும் சரியென்று சொல்லி வந்துவிட்டேன். என்னால் அவர் சொன்ன பணத்தை ரெடி செய்ய முடியாததால் நான் அவருக்கு 21.01.2026 ஆம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் திரு.ஹரிஹரன் அவர்களுக்கு போன் செய்து என்னால் பணம் ரெடிசெய்ய முடியவில்லை என்றும், பணம் ரெடியான உடன் வருவதாக சொன்னேன். அதற்கு அவர் சரியென்று சொல்லி பணம் ரெடியானதும் தன்னிடம் கொடுத்துவிட்டு வாரிசு சான்றிதழை வாங்கிகொள்ளும்படி சொன்னார். லஞ்சம் கொடுத்து கூடுதல் வாரிசு சான்றிதழ்களை பெற எனக்கு விருப்பம் இல்லை. வடக்கு வட்டாட்சியர் அலுவலக அதிகாரி அவர்களால் கையொப்பம் செய்து திரு.ஹரிஹரன் அவர்களிடம் ஒப்படைத்த என்னுடைய 4 கூடுதல் வாரிசு சான்றிதழ்களை, ரூ.7000/-ஐ லஞ்சமாக கொடுத்து திரு.ஹரிஹரனிடமிருந்து பெற எனக்கு விருப்பமில்லை. எனவே வடக்கு வட்டாட்சியர் அலுவலக அதிகாரி

அவர்களால் கையொப்பம் செய்து திரு.ஹரிஹரன் அவர்களிடம் கொடுத்த வாரிசு சான்றிதழ்களை என்னிடம் கொடுப்பதற்கு லஞ்சம் கேட்கும் வடக்கு வட்டாட்சியர் அலுவலக ரெக்கார்டு கிளார்க் திரு.ஹரிஹரன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இடம்: கோவை, நாள்: 22.01.2026, இப்படிக்கு, sd.XXXXX 22.01.2026 (S.Vijeyakumar). Respected Madam, Received the complaint on 22.01.2026 at about 16.00 hrs. sd.XXXXX, 22.01.2026, Inspector of Police, V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.01/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 23.01.2026 at about 09.30hrs sd.XXXXX, 23.01.2026, Inspector of Police, V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

23/01/2026

(D.ஷீலா),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.